பக்கங்கள் 8

ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | கார்த்திகை 23 | முஹூர்றம் 29 | இதழ் 299
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 8 - 12 - 80

GOVT OF SRI LANKA RECEIVED 1980-12-08 PERIODICALS DIVISION NATIONAL LIBRARY COLOMBO

★ தமிழக முதலமைச்சர் கொலைமுயற்சி:

தி.மு.கழகத்தினர்மீது எம்ஜிஆர் குற்றம் சாட்டுகிறார்!

சந்தேகநபர் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினரே -கருணாநிதி

சென்னை, டிச 7

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கொலைமுயற்சியில் அரசியல்பின்னணி ஏதும் உண்டா?

தம்மைக் கொலைசெய்ய முயன்றவர், திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரே என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்திருக்கும் அதே நேரத்தில்; இக்கொலைமுயற்சியில் சம்பந்தப்பட்டவர் முழுக்க முழுக்க அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரே என்று திரு. மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் 'நெல்லை எக்ஸ்பிரஸ்' ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது திருநெல்வேலி மணியாட்சி ரயில்நிலயத்தில் அவரைநோக்கி கத்திபொன்று வீசப்பட்டதும், அவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியதும் தெரிந்ததே. இதுசம்பந்தமாக மாஜி கிராம அதிகாரியான வீரபராக்கிரமபாண்டியன் என்பவர் உடனடியாக கைது செய்யப்பட்டிருந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து இக்கொலைமுயற்சியின் பின்னணியில் அரசியல் ஏதும் உண்டா என்ற கேள்வி உடனடியாக எழுப்பப்பட்டது.

எம். ஜி. ஆர். கருத்து

தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் நேற்று செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில்; தம்மைக் கொலைசெய்ய முயன்றவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று திட்டவட்டமாக கருத்து வெளியிட்டிருந்தார். இதனைத் தமால் நிரூபிக்க முடியும் என்றும் அவர் விளக்கம் கொடுத்திருந்தார்.

கருணாநிதி மறுப்பு

அதே நேரத்தில் இக்கூற்றை திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு மு கருணாநிதி

(8ம் பக்கம் பார்க்க)

உ. த. பண்பாட்டுக்கழக

தமிழகக்கிளை 28-ம் திகதி சென்னையில் கூடுகிறது

சென்னை, டிச 7

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் தமிழகக் கிளை கலைக்கப்பட்டுவிட்டதாகவும் இக்கிளை மீண்டும் இம்மாதம் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சென்னையில் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

இயக்கத்தலைவர் திரு. இராவீரப்பன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பலநாடுகளில் இருந்தும் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வேலணை நி-ஈ)

கன்பொல்லை வீடுகளில் திருத்த வேலைகள்

(யாழ்ப்பாணம்)

கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் தனியார் ஒப்பந்தக்காரர்களால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் தளங்களில் எற்பட்டுள்ள வெடிப்புகளைத் தொடர்ந்து திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரசாங்கக் கட்டடத்திணைக்களத்தை வீடமைப்பு அமைச்சு பணித்துள்ளது. இவ்வீடுகளைப் பிரதமர் ஆர். பிரேமதாசா ஜனவரி மாதம் குடியிருப்பாளர்களுக்கு வழங்குவாரெனத் தெரியவருகிறது.

அதிபர், ஆசிரியர்களை தடுத்த நபர் கைது!

(பண்டத்தரிப்பு)

பாடசாலைக்கு கடமையாற்றச் சென்ற பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் பாடசாலைக்குள்செல்லவிடாது தடுத்த நபர் ஒருவரை சங்கானைப் பொலிசார் கைதுசெய்தனர்.

காலை நேரத்தில் தாம் கடமையாற்ற பாடசாலைக்குச் சென்றபோது மேற்படி நபரும் மற்றும் சிலரும் தங்களை கடமைக்கு செல்லவிடாது தடுத்ததாக சங்கானைப்பொலிஸ் நிலயத்தில் பிரஸ்தாப அதிபர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் மேற்படி

(8ம் பக்கம் பார்க்க)

நகைச்சுவைநடிகர் ரயிலுக்குப் பலி!

சென்னை டிச.7

பிரபல தெலுங்கு திரைப்பட நகைச்சுவை நடிகர் திரு. கே.பி சலாம் (35 வயது) நேற்று சென்னையில் காலமானார்.

கோட்டம்பாக்கம் ரயில் நிலையத்தில், தண்டவாளத்தைத் கடக்கும்போது மின்சார ரயிலினால் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே இவர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

குருநகர் வீடமைப்புத்திட்ட முதற்கட்ட வேலை பூர்த்தி!

மூன்றரைலட்ச ரூபாசெலவில் ருன்ஸ்போமர்

(யாழ்ப்பாணம்)

ஒரு கோடியே அறுபது லட்ச ரூபா செலவில் நிர்மாணம் செய்யப்படவிருக்கும் குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் முதல்கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டத்தில் ஐந்துமாடிகளைக் கொண்ட இருபது வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இவ்வீடுகளை குடியிருப்பாளர்களுக்கு, பிரதமர் ஆர். பிரேமதாசா வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத் தொகுதியில் பெருவாரியான மக்கள் குடியிருப்பதற்கு வீட்டுவசதியின்றி கஷ்டப்படுவதை யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பலமுறை பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறியதை யடுத்து, அமைச்சரவை இப்பாரியதிட்டத்திற்கான அனுமதியை வழங்கியது.

இவ்வேலைகளை பொறுப்பேற்றுள்ள அரசாங்க கட்டிட கூட்டுஸ்தாபனம் இரண்டாம் கட்டிட வேலைகளை ஆரம்பித்துள்ளது. இவ்வேலைகளை கிழக்கு மாகாணத்தில் கடமையிலுள்ள பொறியியலாளர் திரு. நந்திஸ்வரன் அயராத முயற்சி எடுத்துவருகின்றார்.

ருன்ஸ் போமர்

இத்திட்டத்திற்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு புதிதாக மூன்றரை லட்ச ரூபா செலவில் புதிய "ருன்ஸ் போமர்" அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வேலைகள் இம்மாதமே முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்டகாலமாக பாஷையூர், குருநகர் மக்கள் மின்சாதி குறைவால் அனுபவித்த கஷ்டங்கள் புதிய ருன்ஸ்போமர் அமைக்கப்பட்டதுடன் நீங்கிவிடும்

புயலால் சேதமடைந்த

140 பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் புயலால் சேதமடைந்த பாடசாலைக்கட்டிடங்கள் 171க்குப்பதிலாக புதிய கட்டிடங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ள தனியார் நிறுவனம்; இதுவரை 140 கட்டிடங்களின் வேலைகளை ஆரம்பித்துவிட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

புயலால்சேதமடைந்த பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைப்பு செய்யப்படாமல் புயலுக்கு தாக்குக்கொடுக்கக்கூடியதாக புதிய கட்டிடங்கள் அமைக்கும் பணி தனியார் நிறுவனம்ஒன்றிடம்ஒப்படைக்கப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை. ஆயினும் இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட 171 பாடசாலைக் கட்டிடங்களில் இதுவரை 140 கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இவற்றில் 15 கட்டிட வேலைகள் பூர்த்திசெயய்ப்பட்டுள்ளன என்றும் மேலும் 40 கட்டிட வேலைகள் கூரைவரை முடிந்திருப்பதாகவும், மீதி தவணை ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்படுமென்றும்எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் சில பாடசாலைகள் புதிதாக இரு மாடிக் கட்டிடங்களைப்பெறுகின்றது

இன்று யாழ்.ஆசனக் கோவில் வருடாந்தத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ் புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா காலைத் திருப்பலியுடனும் மாலைத் திருப் பவனியுடனும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது புனித மரியாள் மாசில்லாமல் உற்பலித்த திருநாள் அகில உலகிலுமுள்ள கிறீஸ்தவர்களால் இன்று கொண்டாடப்படுவதை பொட்டியே இங்கும் இன்று இத் திருவிழாக் கொண்டாடப் படுகிறது. (கி)

சோவியத் வழியாக ஈரானிய வர்த்தகம்

தெஹ்ரான், டிச 7

சோவியத் யூனியன் வழியாக ஈரானது பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரமளிக்கும் தீர்மானம், ஈரானிய பாராளுமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின்படி, சோவியத்யூனியனும் ஈரான் வழியாக பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சென். பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் 1½ பரப்புக் காணியும் 7 அறைகளைக் கொண்ட வீடும் விற்பனைக் குண்டு. உரிமையாளர்; மா. புவனேந்திரன், தொடர்பு மா. கணேஸ், 41/12, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். 7495

மயிலங்காடு பிரதான வீதியில் 2½ பரப்புக் காணி இரண்டு கிட்டங்கிக்கடை, கிணறு, மலசலகூடம், வீடு வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்புகொள்க விளம்பர இல: 7526, C/ஈழநாடு, யாழ்ப்பாணம். 7526

கி. கனகரத்தினம்
ஜே. பி. யூ எம்.
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுண கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பளை, வீமன்காமம் 'தமிழகத்தை'ச் சேர்ந்த வித்தியானந்தன் பெண் கமலாதேவி என்பவரின் மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்
வழ. இல. ரி/3547

சுப்பிரமணியம் வித்தியானந்தன், தமிழகம், வீமன்காமம், தெல்லிப்பளை.

மனுதாரர்.

மேற்குறித்த இலக்கம் கொண்ட வழக்கு மேலே குறிப்பிட்டவரான காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1980 ம் ஆண்டு ஆடி மாதம் 1ந் திகதி அன்று இதற்கிணங்க முதலிலேயே முற்றுண கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

1980ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்,
(ஒப்பம்)
பதிவாளர், மாவட்டமன்று,
யாழ்ப்பாணம்.

என்னால் வரையப்பட்டது.
க. கேசவன் (ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
7528

தேவை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கண்டி வீதியில் ஒரு வீடு அல்லது வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு அலுவலகப் பாவிப்புக்குத் தேவை. விபரங்களை பெருந்தெருக்கள் திணைக்களம், பளை, நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அறிவிக்கவும். 7555

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சாலஞ்சென்ற என். தம்பையா தம்பியப்பாஎன்பவரின் மரணச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்
வழ. இல. ரி/3567

துரைராஜா சந்திரசீலன், கரம்பன் கிழக்கு தற்போது கோல்ஸ்ன் வீதி, 15,2000 கம்பேர்க் 50, மேற்கு ஜேர்மனி. இவரின் அற்றோணித் தத்துவகாரன் கரம்பன் கிழக்கைச் சேர்ந்த முத்தையா பத்மநாதன் மூலம்

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரணசாதனநியாயாதிக்கவழக்குமேலேபெயர்குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மாசி மாதம் 6-ந் தகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதி.

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.
யாழ். மாவட்ட நீதிமன்றம்

வரைதல்;
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
7546

ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஈடு/199 இலக்க வழக்கில் வாதி சுழிபுரம் கிழக்கு சின்னத்துரை எதிர் மன்னசிங்கத்துக்கு விற்பனவு திகதிவரை போக வேண்டிய தீர்வைத்தொகை 5,444 ரூபாவும் 15 சதமும், வழக்குச் செலவு 574 ரூபா 80 சதமும் விற்பனவுச்செலவாகளும். இதில் கொடுபட்ட 1000 ரூபாவும் செலவில் 170 ரூபாவும் கழித்து மிகுதித் தொகையைப் பிரதிவாதி சுழிபுரம் காளுவன் ஆள்வார் அப்பரிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்விரிக்கப் படுமாதனம் 1980 வருஷம் டிசம்பர் மாதம் 30-ந் திகதி 30-12-80) செவ்வாய்க்கிழமை காலை பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுழிபுரம் இறை 'பெரிய வளவு' நிலப்பரப்பு 4 1/8 கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு சின்னவன் சங்கரனுர்க்கு முருகன் நடேசனுக்கும் பங்காளருக்குமுரிய காணிகள், வடக்கும், மேற்கும் எதிராளிக்குரிய காணி, தெற்கு ஒழுங்கை இந்தெல்லைப்படி இக்காணியடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
விற்பனை ஆணையாளரும், ஏல விற்பனையாளரும்.
643, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 7559

விற்பனைக்கு

கச்சேரி-நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும் சிறிய வீடும் (சகல வசதிகளுடன்) விற்பனைக்குண்டு. 64, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 72 9 (7560)

சின்னத்துரை
கனகரத்தினம்
ஜே.பி.யூ எம்.
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசும்

விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவரும், கோலாலம்பூர், மலேயாவில் வசித்தவருமான இராமநாதர் சதாசிவம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்திலும்

மரணமெய்தியவர்.
வழ இல. T/3543.

1977ம் ஆண்டின் 20ம் இலக்க குடியியல் நடைமுறைச் சட்டத்தின் (திருத்தம்) 554)ம் பிரிவின் கீழ் வெளிநாட்டுத் தகதுவப் பத்திரத்தை அங்கீகரிப்பதற்கும், கீழ்இலட்சனையிடுவதற்குமான விண்ணப்பத்தின் விடயத்திலும்.

1973 ம் ஆண்டு வைகாசி மாதம் 19 ந் திகதி கோலாலம்பூரில் அமைந்துள்ள மலேயா உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தத்துவப்பத்திரத்தின் விடயத்திலும்.

இராமநாதர் சதாசிவம் கைம்பெண் பரமேஸ்வரி, பெற்றவின் காடினஸ், பெற்றலங் ஜெயா, மலேயா தனது தத்துவக்காரன், யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த பேரம்பலம் நாகராஜா மூலம்.

மனுதாரர்.

இவ் விண்ணப்பம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குப்பின் மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில், 1973-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ந் திகதி அன்று, கோலாலம்பூரில் அமைந்துள்ள, மலேயா உயர்நீதிமன்றத்தால், வழங்கப்பட்ட தத்துவப்பத்திரம் (Letters of Administration) 1977ம் ஆண்டின் 20ம் இலக்க குடியியல் நடைமுறைச்சட்டத் (திருத்த சட்டத்தின் (554)ம் பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தால், இலச்சினை இடப்படுவதற்காக ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1980 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்,
(ஒப்பம்)
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது,
க. கேசவன் (ஒப்பம்)
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. 7527

சிரமதான மூலம் ஒழுங்கை விஸ்தரிப்பு

(அரியாலை)

நாவாந்துறை கோவில் வீதி கலைவாணி சனசமூக நிலையச் செயலாளர் தருமநாதாசாவின் தலைமையில் நிலைய நிர்வாகிகளும், அங்கத்தவர்களும் தமது பகுதியிலுள்ள ஒழுங்கைகளை அகலிக்கும் வேலைகளைச் சிரமதானம் மூலம் செய்து வருகின்றனர்.

இப்பகுதியை நேரில் பார்வையிட்ட யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு [illegible] அவர்களின் பேரில் இவ்வேலை [illegible] செய்து வருகின்றனர். (ஈ)

வவனியா பகுதியில் உழுந்துப் பயிரில் இலை அரிக்கும் நோய்!

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் உழுந்து பயிரின் இலைகளை ஒரு வகைப் புழுபரந்த அளவில் மிக மோசமாகத் தாக்கி வருகிறது. இலைகளும் அரிக்கப்பட்டு நரம்புகளும் காம்புகளும் மாத்திரம் காணப்படுகின்றன. இக்கொடிய நோயினால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும் நிலைமை உருவாகிவருகிறது.

இந்நோய் தாக்கத்தைத் அவதானித்துள்ள விவசாய திணைக்களம் அதனைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளை தீவிரமாக உழுந்துச்செய்கையாளர்களுக்குப் போதனை செய்து வருகின்றது.

விவசாயப் போதனாசிரியர்களைக் கொண்டு விவசாயிகளிடையே கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து அதன் மூலம் நோய்த் தாக்கத்தை தடுக்கும் முறைபற்றிய விளக்கங்களும் செய்முறைப் பயிற்சியின் மூலமாக மருந்து விசிறும் முறையும் காட்டிக் கொடுக்கப்படுகின்றது.

இதுபற்றிய துண்டு பிரசுரங்களும் கிராமங்களில் அங்காங்கே ஒட்டியும் விசேடமாக செட்டிக்குளம் பகுதியில் ஒலி பெருக்கி மூலமாகவும் விவசா

(3-ம் பக்கம் பார்க்க)

முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(மன்னார்)

மன்னார் லயன்ஸ் கழகம் அங்கவீனர் ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளது.

சுமார் 2500ரூபா பெறுமதியான முச்சக்கரவண்டி அடம்பன் பகுதியில் உள்ள அங்கவீனர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது (க

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் பெண் பங்கேஸ்வரியின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

1. வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் பெண்
2. தங்கேஸ்வரியும், மானிடன், காரைநகர்.

மனுதாரர்
வழ. இல. ரி/26

எதிராக
சந்தையா தர்மலிங்கம், வேதரடைப்பு, காரைநகர்.

எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்குமேலே பெயர்கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ம் தகதி.

மன்றின் கட்டளைப்படி.
(ஒப்பம்)
தா. குலநாயகம்,
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதார்களின் சட்டத்தரணி.
4-12-80

எதிர்காரணம் காட்டும் திகதி 22 1-81 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
தா. குலநாயகம்,
7547 பதிவாளர்.

கட்டணம் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டசிகையலங்கரிப்பாளர் சங்கம் சிகையலங்கரிப்பதற்கான கட்டணங்களை இம்மாதம் முதல் அதிகரித்துள்ளது.

சவரம் செய்வதற்கு 50 சதத்தாலும், முடிவெட்ட ஒரு ரூபா ஐம்பதுசதத்தாலும் முடி வெட்டிச் சேவ் எடுக்க 2ரூபா 50சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச)

"சட்டநடவடிக்கை எடுக்கப்படும்"

(யாழ்ப்பாணம்)

"தென்மராட்சியத்தில் ஒரு சுருட்டின் விலை 25 சதமாக அதிகரித்துள்ளது. எமது சங்கத்தின் 15 ரூபாகூலி உயர்வுக் கோரிக்கையைத் தொடர்ந்து சுருட்டு முதலாளிமார் சுருட்டின் விலையை 30 ரூபாவாக கூட்டிவிட்டுத் தொழிலாளிகளுக்கு கூலி கூட்டித்தரமறுக்கிறார்கள்

இலங்கை சுருட்டுத் தொழிலாளர்சங்கத்தலைவர் திரு மா. க. முதலியார் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது சங்க உயர்வைத் தொழிலாளர்களுக்கு வழங்காத முதலாளிமார்கள் அனுப்பும் விற்பனையாளருடன் தொடர்பு கொள்வதுடன் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு பாராட்டுச்செய்தி

(மன்னார்)

இலங்கை முஸ்லிம்களின் சமய, கலாச்சார சமூக நலன்களிலும் பள்ளிவாசல்கள் நிர்வாகங்களிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் பதிதாக திணைக்களம் ஒன்றினை ஆரம்பித்து வைத்தமைக்காகவும், இத்திணைக்களத்தினை போக்கு வரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமதுவிடம் ஒப்படைத்தமைக்காகவும் எருக்கலம்பிட்டி ஐ. தே. க. கிளை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு பாராட்டுச் செய்தி அனுப்பி வைத்துள்ளது (அ)

கரிசல் பகுதிக்கு உபதபால் நிலையம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள கரிசல் பகுதியில் உபதபால் நிலையம் ஒன்று இம்மாதம் 19-ம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது

இந்த உபதபால்நிலையம் பேசாலை தபால் நிலையத்தின் கீழ் இயங்கும். (ச)

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஷ்னேவ் இந்தியா வரும்போது

ஆப்கானில் ரஷ்ய தலையீட்டை எதிர்த்து ஊர்வலம்!

சோவியத்துருப்புக்கள் வெளியேறவேண்டும் என்றும் ஊர்வலக்காரர் கோருவர்

புதுடில்லி, டிச. 7

சோவியத் அதிபர் திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் திங்கட்கிழமை இந்தியாவுக்கு வரும்போது ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீட்டைக் கண்டித்து புதுடில்லியில்மௌனஊர்வலமொன்றை ஆப்கானிஸ்தான் ஆதரவாளர்கள் நடத்த உள்ளனர்.

இந்தியஎதிர்க்கட்சித்தலைவர்களும் அடங்கிய ஒருகுழுவினர் இது குறித்து அரசுக்குஅறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோரும் பதிரங்கக்கடிதமொன்றையும் ஊர்வலத்தினர் திரு. பிரஷ்னேவிடம் கையளிப்பார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தனியார் கல்லூரி ஆசிரியர்க்கும் பென்சன் கிடைக்கும்

(அரியாலை)

அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கும் பென்ஷன் திட்டத்தினால் தனியார் கல்லூரிகளில்கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் சுமார் இரண்டாயிரத்தைந்நூறு பேர் நன்மையடையவிருக்கிறார்கள்.

1960-ம் ஆண்டுக்குப் பின் தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சேமலாபநிதியின் அடிப்படையில் சேமலாப நிதிக்கு பணம் அறவிடப்பட்டது.

அரசாங்கத்தின் புதிய திட்டத்தினால் சேவைக்குச்சேர்ந்த நாள் தொடக்கம் இவர்கள் பென்ஷன் திட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

பெனஷன் திட்டத்தில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் இம்மாத நடுப்பகுதியில் தனியார் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக கல்விப் பணிப்பாளர் திரு. ஹெட்டி ஆராய்ச்சி தம்மைச் சந்தித்த தனியார் கல்லூரி அதிபர்களிடம் தெரிவித்துள்ளார். (ச)

1500 ஏக்கர் நிலத்தில் உபஉணவு

(மன்னார்)

உப - உணவுப் பயிர்ச்செய்கை விருத்தி செய்வதற்கான ஏற்றுநீர்ப்பாசனத்திட்ட வேலைகள் யாவும் விரைவில் பூர்த்திபடையவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு 20லட்சம் ரூபா செலவில் பெரிய மடுவில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்ளளாம் குளத்தில் 7 லட்சம் ரூபா செலவில் 3 குழாய் கிணறுகள் வெட்டப்பட்டுவருகின்றது.

இவை பூர்த்தியானதும் சுமார் 1500 ஏக்கர் நிலத்தில் உப- உணவுப்பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

வவனியா—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தினைக்கள உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை செய்து வருகிறார்கள்.

வவனியா மாவட்டத்தின் உதவி விவசாய பணிப்பாளர் திரு. எஸ். ரீ. பத்மநாதன் இதுபற்றிகருத்துத்தெரிவிக்கையில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இம்முறை இந்த இலையரிப்புழு நோய் இம் மாவட்டத்தில் உழுந்துப் பயிரைத் தாக்கி வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த மொனோகுரொட்டலஸ், மெற்றமிடொபஸ், பென்தயன் ஆகிய மூன்றில் ஏதாவது ஒரு ரசாயனக் கழம்பு செறிந்த கிருமி நாசினி ஒன்றை விசிறும்படியாக விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வவனியா மாவட்டத்தில் எல்லாமாக 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் செட்டிகுளம் பகுதியிலும் மிகுதி ஏனைய பகுதிகளிலுமாக பயிரிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

பாரதியாரின் 99வது பிறந்த தினவிழா

சென்னை, டிச. 7

மகாகவிபாரதியாரின் 99வது பிறந்த தினவிழா நேற்று இந்தியா எங்கும் கொண்டாடப்பட்டது. (இ)

"நீதிமன்றம் சென்றவர்

துப்பாக்கி முனையில்தடுத்து நிறுத்தி தாக்கப்பட்டாராம்!

(புலோலி)

காரில் நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருந்த ஒருவரை உழவு இயந்திரம், கார் என்பவற்றில்வந்த கோஷ்டியொன்று காருக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து காரை நிறுத்தி காரில் இருந்தவரை வெளியே இழுத்து வெட்டிவிட்டு மின்னல் வேகத்தில் பறந்த சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பிகுதியைச்சேர்த்த கரவெட்டி மேற்கில் நிகழ்ந்துள்ளது.

சிவம்என்பவரும் இன்னும் சிலரும் நீதிமன்றத்திற்குச் செல்வதற்காகக் காரில்சென்று கொண்டிருந்தபோது எதிராக வந்த உழவு இயந்திரம் அக்காரைவழிமறித்ததாகவும், ஆனால் கார்ச்சாரதியோ தனது விவேகத்தினால் காரைநிறுத்தாது ஓட்டிச் சென்றதாகவும் இச் சம்பவம் பற்றி கூறப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மின்னல்வேகத்தில் வந்த இன்னொருகாரில்வந்த ஒருகோஷ்டியினர் சிவம் என்பவர் சென்று கொண்டிருந்ததகாருக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது கார்நின்றுவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மற்றக்காரில் வந்தகோஷ்டியினர் காரில்இருந்த சிவம் என்பவரை வெளியே இழுத்துவெட்டிக்காயப்படுத்தி விட்டு ஓடி மறைந்து விட்டனரென்றும் கூறப்படுகிறது. வெட்டுக்காயங்களுக்குள்ளான சிவம் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் கிடைத்ததும் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. குறூப்தலைமையிலான பொலிஸ் கோஷ்டி உழவு இயந்திரமொன்றையும், காரொன்றையும் தேடிவருவதுடன் இச்சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் ஏழுபேரை தடுத்துவைத்திருக்கின்றது. க

பிரதமர் பலியானதை அடுத்து

போர்த்துக்கலில் அரசியல் நெருக்கடி

லிஸ்பன் டிச 7.

போர்த்துக்கல் பிரதம மந்திரி விமான விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கலிலுள்ள சகல கட்சிகளையும் அந்நாட்டு பாதுகப்புப் படையினருடன் ஒத்துழைக்கும்படி போர்த்துக்கல் அரசாங்கம் கேட்டுள்ளது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை போர்த்துக்கலில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக சிறியவிமானம் ஒன்றில் போர்த்துக்கல் பிரதம பிரயாணம் செய்தபோதே விமானம் மாடிக்கட்டிடம் ஒன்றுடன் மோதி தீப்பற்றி எரிந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

போர்த்துக்கல் பிரதமமந்திரியின் மறைவைத் தொடர்ந்து அந்நாட்டின் பிரதி பிரதம மந்திரி ஜனாதிபதி திரு. ஜீன்லினால் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது குறித்து அந்நாட்டின் தேசிய தேர்தல் குழு உடனடியாகக்கூடி முடிவுசெய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்களின் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி திரு. ஜீனஸுசும் முன்னாள் ஜனாதிபதி திரு. அன்ரோனியோ டீ ஸபினோலாவும் போட்டியிடுகின்றனர்.

இதேவேளையில் பிரதமரின் மரணத்தை அடுத்து அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று போர்த்துக்கலின் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ரெ)

மீளாடும் வேலை

(சித்தன்கேணி)

காரைநகர் தபாற் கந்தோரில் அண்மையில் வேலைநிறுத்தம் செய்த ஏழு தபால் விநியோகிக்கும் ஊழியர்களும் வெள்ளிக்கிழமை காலை தந்தி மூலம் வேலைக்கு அழைக்கப்பட்டு வேலை செய்கின்றார்கள். இதுவரை இவர்களின் வேலையைச் செய்துவந்த தற்காலிக ஊழியர்கள் வேலையை இழந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

"இனவாத அரசியலுக்கு இனிமேல் நாட்டில் இடமில்லை"

சைவமங்கையர் கழக பரிசளிப்பு விழாவில் ஜே. ஆர்.

(கொழும்பு)

விகிதாசாரதேர்தல் முறையில் இனரீதியானஅரசியலுக்கு இடமில்லை. இனிமேல் இனவாதிகள் வீடுசெல்ல வேண்டியதுதான்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொழும்பு சைவமங்கையர் கழக பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

பரிசளிப்புக் குழுத்தலைவரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு.யோகேந்திராதுரை சுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஜெயவர்த்தனா மேலும் பேசுகையில் கூறியதாவது;

உலகம் இன்று தொழில் நுட்பவிஞ்ஞானத் துறையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. நாமும் அதற்கேற்றவாறு முன்னேற வேண்டும். இதற்கு நமது கல்வித் துறையில் பரியமாற்றம் வேண்டும்.

விரைவில் கல்வி அமைச்சு வெளியிடவிருக்கும் கல்வி அறிக்கையில் இப்பரிய மாற்றங்கள் இருக்கும்

தனியார் கல்வி நிறுவனங்கள் கடந்த 40 ஆண்டுகளாக எமது மாணவர்களின் கல்விக்காகப் பெரும்சேவை ஆற்றியுள்ளது.

ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கமுடியாத நிலையிலும் கூட அக்கல்வி நிறுவனங்கள் தொடர்ந்தும் சேவையாற்றி வந்தன. இப்போது இக்கல்வி நிறுவனங்களுக்கு அரசு அதன் உதவி பெறும் நிபந்தனையாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் (இ)

நெல்லைப் பாதிக்கும் களைகளைக் கொன்று விளைச்சலைப் பெருக்குங்கள்

மகவூடஸ 3,4 டீபீஎ (450 மி.லீ.) ரூ 36.00

எம்சீபிஎ 40 (450 மி.லீ.) ரூ. 18 00

பாவித்து அதிக விளைச்சலும் இலாபமும் பெறுங்கள்

மக்வூட்ஸ் லிமிட்டெட்

297, ஆனியன பிளேஸ கொழும்பு 2

தொலைபேசி 32941-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இவ்வுலகம் ஒரு சத்திரம், தர்மசாலை. இது உனது சொந்தஸ்தானமன்று. உனது பூர்வீக இருப்பிடம் பரம்தாமம். எனவே அதை நோக்கிச்செல்.
— சுவாமி சிவானந்தர்.

நமது நோக்கு

பகைநட்பாக் கொண்டொழுகும் 'சீசன்'

உலகிற் பல மதங்கள் தோன்றியிருப்பதை ஈசனுடைய அனுக்கிரகம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் வெவ்வேறு மனப்பான்மைக்கு வெவ்வேறு மதங்கள் தேவையாயிருக்கின்றன.

வருடமுடிவில் நிகழும் நத்தார்ப் பண்டிகையும், அதனைத் தொடர்ந்து வரும் புது வருடமும், ஒரு சர்வதேச விழாவாகக்கொண்டாடப்படுவது இக்கால மரபு.

எப்படி ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழியென்று ஒப்புக்கொண்டு எவரும் அதனைப் பயில விரும்புகின்றனரோ, அதேபோல் நாகரிக உலகம் நத்தார்க்கொண்டாட்டத்தில் இன, மத, மொழி வேறுபாடுகள் இடம் பெறாமல், மக்கள் குதூகலிப்பது நாட்டில் நல்லெண்ணமும் சமாதானமும் நிலவ ஏதுவாகும்.

இவ்வருட நத்தார் தினம் பொது மக்களுக்கு மனப்பூரிப்பு அளிக்கும் வைபவமாகக் கொள்வதற்கில்லை. கடைகள் நிரம்ப உணவு, உடை, குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் இருந்த போதிலும் வாங்கும் ஆற்றல் உள்ளவர்கள் எத்தனை பேர்?

நத்தார்த்தினத்தை மேனாட்டுப் பாணியில் நாம் கொண்டாடி வருவது அவசியமற்றது. ஏழைகளை இரட்சிக்க அவதரித்த இயேசுநாதரின் பெயரில் எங்கள் நாட்டு மக்கள் இடாம்பீக விழாவெடுப்பது பொருத்தமற்றதுங்கூட.

உண்மையில் நத்தார்ப் பண்டிகையென்றால், தமிழர், சிங்களவர், இந்துக்கள், முஸ்லிம்கள் என்று தன் இன நலம் பேணுவதை மறந்து, ஒன்றுபட்ட ஒரு குடும்பம் என்ற சித்தாந்தம் மணம் வீசும் காலமே!

எக்காலத்தில் என்னதான் நிகழ்ந்தாலும், இவ்விழாக் காலத்திலாவது பகையை ஒழித்து நல்லுறவை வளர்க்க நாமெல்லோரும் கடமைப்பட்டுள்ளோம்.

இன்னல்கள் மலிந்த காலம் இது என்று குறிப்பிட்டோம். எம்மத்தியில் இன்று பட்டினி வாயில் வாழும் வேலையிழந்த 40,000 பேரும் அவர்களின் குடும்பங்கள் சுமார் இரண்டரை லட்சம் மக்களும் நான்கு மாதங்களாகப் படுந்துயரை நாம் இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

வேலைநிறுத்த வரலாற்றைப் புரட்டிப் பாட்டி வாதாடுவது எவ்விதத்திலும் இன்றைய தேவைக்குதவாது. இதனை மறந்து போராட்டம் பற்றிப் பேசுவதும், அடுத்த ஆட்சி வந்தால் என்ன செய்யுமென்பதையும் ஆராயும் தலைவர்கள் வேலையிழந்திருக்கும் அப்பாவி மக்களை அரசியல் அடகு வைக்கும் நோக்கங் கொண்டவரென்று கருத இடம் உண்டு.

இந்த வகையில் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கோரி வருவது நியாயமானது. அரசை அடிபணிய வைக்கும் எண்ணம் எதுவுமின்றி ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது நியாயமானதென்பதை அவர்கள் வற்புறுத்திவருகின்றனர்.

நத்தார் திருநாளை முன்னிட்டு நல்லெண்ணம் வளர்க்கும் இச்செயலை அரசு தாமதமின்றி நிறைவேற்றுவது நியாயமானது.

நிபந்தனைகள், வேலைநிறுத்தம் தொடர்பான மற்றெந்தப் பிரச்னைகள் யாவும் காலந்தாழ்த்தி ஆராயப்படக்கூடியவை. சர்ச்சைக்குரிய விடயங்களைப் பின்போட்டு எல்லோரும் நத்தார் தினங்கொண்டாட அனைவருக்கும் வேலைக்குத் திரும்பும்படி உத்தரவிடுவதே இக்காலத்துக்கேற்ற, உசிதமான செயலாகும்.

அரசு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை இவ்வேளையில் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டது.

சம்பளஉயர்வு கேட்டவர்கள் தெருவில் நிற்க, அவர்களின் இடத்தைப் பிடித்திருக்கும் தற்காலிகப் போர்வழிகள் அதனை அனுபவிப்பதும், வேலைகள் ஸ்தம்பித்திருப்பதும் மிகக்கவலைக்குரிய நிலை.

அரசாங்கம் தானாக இந்தச் சீர்கெட்ட நிலையைச் சரிப்படுத்தாமல், தக்கார் கூறுவதைக் காதாமலும் தான் தோன்றித்தனமாய் ஒழுகுதல் மதியுடைமையாகாது.

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தல் செங்கோலரசின் சால்பு. அரியல் விரோதிகளையே அணைக்கும் 'சீசன்' நத்தார் சீசனாகும்.

பகை நட்பாக்
கொண்டொழுகும்
பண்புடையாளன்
தகைமைக்கண்
தங்கிற்றுலகு.

அரச தினைக்களங்களில் தமிழ்ஊழியர் பற்றாக்குறை!

அமைச்சர் தேவா ஒப்புக்கொள்கிறார்

(கொழும்பு)

தமிழ்மொழிக்கு அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தை அளிக்க வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

தமது அமைச்சின் நிதிஒதுக்கீடு மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசுகையில் திரு. தேவநாயகம் மேலும் பேசுகையில் கூறினார்.

வடக்குக் கிழக்கில் தமிழில் நிர்வாகத்தை நடத்த தமிழ் ஊழியர்கள் போதுமானதாக இல்லை என்பது உண்மையே.

எனது தொகுதியில் கூடத் தமிழ் ஊழியர்களைக் காணமுடியாதிருக்கிறது. நிர்வாக சேவையில் தமிழ் ஊழியர்களைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது. தமிழ் மாணவர்கள் விஞ்ஞானம் கற்பதினாலேயே நிர்வாகச் சேவையில் இப்போதெல்லாம் தமிழ் ஊழியர்களைக் காணமுடியவில்லை.

இச்சமயத்தில் குறுக்கிட்ட திருமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன், ஏன் கலைப்பட்டதாரிகள் எத்தனையோபேர் வேலையில்லாதிருக்கிறார்கள் என்பது அமைச்சருக்கு தெரியாதா என்றார். அப்படியானால், நிர்வாகச்சேவைக்கு ஆட்களை நியமிப்பதில் ஏதோதவறு இருக்கிறது என்றும் திரு. சம்பந்தர் கூறினார்.

கிராமசேவையாளருக்கு பதவியுயர்வு

புதிய ஜனத்தொகை மதிப்பீடு வந்தபின்னர் புதிதாக கிராமசேவையாளர்களும் உதவி அரசாங்கஅதிபர்களும் நியமிக்கப்படுவர்.

புதிய சம்பளத் திட்டம்

தற்போது சேவையிலிருக்கும் கிராம சேவையாளர்களுக்கு விரைவில் பதவியுயர்வு வழங்கப்படும். அத்துடன் கிராமசேவையாளர்களுக்கும் புதிய சம்பளத்திட்டத்தின் கீழ்சம்பளம் வழங்கப்படும்.

(ம-இ)

"வடக்கு - கிழக்கில் குடியேறியுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னைதீர்க்கப்படவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறியுள்ள எழுபதாயிரம் இந்திய வம்சாவழியினர் பலர் இன்றும் நாடற்றவர்களாகவே வாழ்கின்றார்கள். அவர்களின் பிரச்னைகள் உடனடியாகத் தீர்க்கப்படல்வேண்டும்".

வடக்கு கிழக்கில் குடியேறியுள்ள இந்திய வம்சாவழியினரின் அந்தஸ்தையும், எதிர்காலத்தையும் ஆராய்வது சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தப் போவதாக வெளிவந்துள்ள செய்தியை அடுத்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. பொன் குமாரசாமி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. பொன். குமாரசாமி விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது; அது தொடர்பாக நாம் விடுக்கும் அறிக்கை:

"சுமார் எழுபதினாயிரம் இந்திய வம்சாவழியினரில் பலர் இன்றும் இப்பிரதேசங்களில் நாடற்றவர்களாக வாழ்கின்றனர். அவர்களின் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். அதுவரையும் பின் கூறப்படுவன உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அவர்கள் தற்பொழுது ஈடுபடும் தொழிலில் அல்லது முயற்சியில் தொடர்ந்தும் கடமையாற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

"அவர்களின் சுயேச்சையான விருப்பத்திற்கேற்ப இலங்கை அல்லது இந்திய - பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும். இதற்கான பேச்சுவார்த்தைகளை உடனடியாக இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும்.

"இப்பிரதேசத்தில் உள்ள காணிச்சொந்தக்காரர் இந்தத் தொழிலாளர்களை மிகக் குறைந்த சம்பளத்திற்கு வேலைவாங்குவதையும், மற்றறும்வழிகளில் இம்சிப்பதையும் தடைசெய்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுக்கவேண்டும்".

'இவர்கள் குடியேறியிருக்கும் காணித் துண்டுகளையும் அதில் கட்டிய வீடுகளையும் செய்யும் பயிர்களையும் தொடர்ந்து இவர்கள் அனுபவிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்'.

(கொ-ஈ)

மக்கள் கருத்து

வெரித்தாஸ் (மணிலா) வானொலி நேரம்

வெரித்தாஸ் வானொலி பற்றி நான் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்தமைக்கு மிக்கநன்றி. தயது செய்து நிகழ்ச்சிகள் ஒலிரப்பாகும் அலைவரிசைகளையும் நேரத்தையும் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் இது ரசிகர்களுக்குப் பெரிதும் உதவுள்ளதாக இருக்கும்.

தினமும் காலை 7-00—7-30 வரை 16.19 மீட்டர் கிற்கே மாலை 7.30—8-00 வரை 19, 25, 31 மீற்றர் கிற்றலை இவற்றுள் காலையில் 16 மீட்டரிலும் மாலையில் 25, 31 ஆகிய மீட்டர்களிலும் இவ்ஒலிபரப்பு இப்பகுதியில் தெளிவாகக் கேட்கும்.

எஸ். உமாகாந்தன்,
[illegible]

இலவசபாடப் புத்தகங்கள்

(மன்னார்)

எருக்கலம்பிட்டி ஸ்ரார் கிட் கழகத்தினர் எருக்கலம்பிட்டி ஹிஜ்ரா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடபுத்தகங்களையும் மற்றும் உபகரணங்களையும் வழங்கினர்.

இவ்வைபவம் ஜனாப். எம் ஜ. அனஸ் தலைமையில் நடைபெற்றது.

தடைசெய்யக் கோரிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகாமையாக மதுபான விற்பனை நிலையம் ஒன்று விரைவில் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுழிபுரம் தொல்புரம் பகுதிப் பொதுமக்கள் சுழிபுரம் கிராம சபையை வேண்டியுள்ளனர். (அ)

டியல்ட்றெக்ஸ் மீண்டும் செயலாற்றுகிறது

கறையான் - உங்களது மரச் சட்டங்கள், சீலிங் பலகைகள், மட்டைகள் ஆகியவற்றைத் துளைத்து நாசமாக்குவது கறையான். ஆனால், டியல்ட்றெக்ஸ் மீண்டும் வந்துவிட்டது. மிகவும் பிரசித்தமான கறையான் பாதுகாப்பான டியல்ட்றெக்ஸ் பிரபல லங்கெம் கொம்பனியில் இப்பொழுது கிடைக்கிறது.

உங்கள் வீடு, களஞ்சியம், தொழிற்சாலை ஆகியவற்றை நிர்மாணிக்கும் போதானால் மிகவுஞ்சிறந்தது. கறையான் போன்ற மரங்களை அழிக்கும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். டியல்ட்றெக்ஸ் 20 கைத்தொழில் கட்டிடங்களுக்கும், கட்டிடம் அமைய இருக்குமிடங்களுக்கும் சாலச்சிறந்தது.

அன்மையிலுள்ள லங்கெம் வியாபாரியிடம் கேளுங்கள் அல்லது கொழும்பு - 9, பேஸ்லைன் வீதி 760ம் இலக்கத்திலுள்ள லங்கெம் தலைமைக் காரியாலயத்தில் விசாரியுங்கள்.

டியல்ட்றெக்ஸ்20 கறையானின் விரோதி

450 மி. லீ. ரூ. 44/- 3.78 லீட்டர் ரூ. 362-25

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லட்சரூபா லஞ்சவழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை!

(கொழும்பு)

ஒரு லட்சம் அந்நிய செலாவணி லஞ்சவழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. இவா செல்லையா முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் அந்நிய செலாவணி உதவிக் கட்டுப்பாட்டதிகாரி கே: ஜே ஸ்ரான்லிபீரிஸ், பி டி டுலவெல, பி வி. பி தயூடீன் ஆகியோர் 75 மார்ச் 5ம் தேதிக்கும் 21ம் தேதிக்கு மிடையில் சி.டி. பன்னிவிஜய சேகராவிடம் ஒரு லட்சம் ரூபா லஞ்சம் கோரி பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டதாகவும், 1ம் எதிரி 75 மார்ச் 21ம் திகதி 25,000 ரூபா லஞ்சம் பெற்றுக் கொண்டதாகவும் 2ம், 3ம் எதிரிகள் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம், சட்டத்தரணி கே. எஸ் ரத்னவேலின் உதவியுடன் ஆஜரானார்.

2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி பி. நவரத்தினராஜா கியூ. சி, சட்டத்தரணி சிவாராஜரத்தினம், சட்டத்தரணி திருமதிசாந்தா பெர்ஞன்டோ ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி ஜி.பொன்னம்பலம் (ஜூனியர்), சட்டத்தரணிகே. பூபாலசிங்கம் சகாக்களுடன் ஆஜரானார்.

மன்னாரில் மக்கள் தின விழா

சுகாதார அமைச்சர் கலந்துகொள்வார்!

பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் இம்மாதம் 13 ம் திகதி மக்கள் தினவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள புதிய 'எக்ஸ்றே' கருவியை சுகாதார அமைச்சர் இயக்கிவைப்பார்.

இவ்விழாவில் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா உட்பட சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. பி சி. பெரேரா, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எச். ஏ. யேசுதாசன், மாவட்ட கட்டிட பொறுப்பாளர் திரு. எம், செல்வநாயகம், மன்னார் எம். பி. திரு. பி எஸ். சூசைதாசன், மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப், மன்னார் அரசாங்க அதிபர் திரு கமிலஸ் பெர்ணண்டோ, மன்னார் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தேவகலால், சுகாதார அமைச்சின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிலகா, மன்னார்-தள்ளாடி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி மேஜர் ஜெரிசில்வா ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

சுகாதார நல்வாழ்வு சுலோக ஊர்வலம், பார்வையாளர் தங்கு மண்டபம் திறந்துவைத்தல், துவிச்சக்கரவண்டி நிலையம் திறந்துவைத்தல், சிரமதானம் மூலம் கட்டப்பட்ட சுற்றுமதில் திறந்துவைத்தல், புதிய மின்மாற்றிய இயக்கி வைத்தல், நடைபாதை திறந்துவைத்தல், முழு நேர நீர் வழங்கலை ஆரம்பித்துவைத்தல், மூன்றாவது மனைக்கான அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளல், பௌதீக வைத்திய உடற்பயிற்சி அரங்கை திறந்துவைத்தல், அன்பளிப்புச் செய்யப்படும் 30 நாற்காலிகளை ஏற்றுக்கொள்ளுதல், மன்னார் மாவட்டத்தல் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாதணிகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறும். (க)

செட்டிகுளம் பேக்கரி தீக்கிரை: நால்வர் றிமாண்டில்

(வவனியா)

செட்டிகுளத்தைச் சேர்ந்த சுமார் 35 ஆயிரம் ரூபாபெறுமதியான பேக்கரியும் வீடும் தீக்கிரையானது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் நால்வர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முத்துசாமி யசோதாவுக்குச் சொந்தமான பேக்கரி இம்மாதம் 2-ம் தேதி இரவு தீக்கிரையானது பற்றிப் பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டிருந்தது.

துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி தீ வைத்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களான வடிவேல், ராமநாதன், திருநாவுக்கரசு, அமிர்தலிங்கம் ஆகியோரைப் பொலிஸார் வவனியா மாவட்ட நீதிபதி திரு. பெட்ரிக் பெர்ணண்டோ முன்னிலையில் ஆஜர்செய்தனர் நீதவான் இம்மாதம் 16-ம் தேதி வரை ரிமாண்டில் வைக்குமாறு கட்டளையிட்டார். (க-அ)

வட்டவிதானைமார் தெரிவு

(சித்தன்கேணி)

வட்டுக்கிழக்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவுக்கான வட்ட விதானைமார்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். திரு. ந. சிவஞானம், (வட்டுகிழக்கு) திரு. அ. கந்தையா, (சங்கரத்தை) திரு. மூ. மார்க்கண்டு, (துணைவி) திரு. அ. ச. கனகரத்தினம் (கரைச்சிப்பகுதி) திரு. பொ. மகாதேவன். சீக்காய்பகுதி)

சாயிசேவா நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தெற்கு பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தின் மூன்றாண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடும்முகமாக அதன் நிலையத்தில் இம்மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நகர சங்கீர்த்தனமும் பால் நாராயண பூசையும் மாலையில் பஜனையும் நடைபெறவுள்ளது. (அ)

நூலகம் விஸ்தரிப்பு

(சித்தன்கேணி)

சங்கரனை பட்டினசபை பொது நூலகம் கட்டிட வசதி பற்றாக்குறையாக இருப்பதனால் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்கு பட்டினசபை விசேட ஆணையாளர் இரா. தணிகாசலம் ஆரம்பவேலைகளை மேற்கொண்டு வருகின்றார்.

நீர் போதாமல் கருகும் பயிர்கள்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் இம்முறை இலாபமின்மையை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வழமையாக இப் பகுதிகளில் கார்த்திகை மாதங்களில்கிணறுகள் நிறைந்தும் வயல்களில் மழைநீர் தேங்கியும் காணப்படும். ஆனால் இம்முறை மழை மிகவும் குறைவாக உள்ள காரணத்தினால் நெல் வெங்காயம் போன்ற பயிர்கள் நுனிசருகியும் செயற்கை உரமிடமுடியாமலும் உள்ளன. கடந்த காலங்களைப்போலல்

(8-ம் பக்கம் பார்க்க)

நத்தார் - புத்தாண்டு வைபவங்களையொட்டி, யாழ்ப்பாண மக்களுக்கு இலாபகரமாக, பலபொருட்களை வழங்குவதற்காக விசேடமாக வரவழைக்கப்பட்டுள்ளன

உங்கள் ஓடர்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்!

யப்பான் நாட்டிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்டு, வடபகுதி விவசாய நண்பர்களின் உற்ற தோழனாகத் திகழ்வது "இசுக்கி" உழவுயந்திரம்!!

எமது காட்சிச்சாலையில் பார்வையிட்டு கொள்முதல் செய்யலாம்! இலாபகரமானது!!

குறைந்த எரிபொருள்; அதிக சக்திகொண்டது;
இலகுவான கிளச் அமைப்பு;
சரிப்படுத்தும் கைப்பிடி; சுழலும் மண்வெட்டி;
டீசல் என்ஜின்; அதிகபாரம் ஏற்றலாம்
தகுதிகாண் பொருட்களை நாடுவோர்
"இசுக்கி"யையே விரும்புவர்!

இவை மட்டுமா?
எதுவேண்டுமோ அத்தனையும் கிடைக்கிறதுஎம்மிடம்!!

விவசாயிகளின் தேவைகளுக்கு:-
நீரிறைக்கும் யந்திரம், இரண்டுசில்லு உழவு இயந்திரம், தெளிகருவிகள், உப உறுப்புக்கள், அல்கத்தின் குழாய்கள், கிருமி நாசினிகள், விவசாய உபகரணங்கள், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக்கான உரக்கலவைகள்.

உப உணவுப் பொருட்கள்:-
பூடு, மிளகு, நெஸ்டம்,
ஓவல்ரின், வெஸ்பாக் டின் மீன்.

மக்ஸ்பிறே பாலுணவு,
கிறிஸ்மஸ் புதுவருட அலங்காரங்கள்.
தைவானிலிருந்து வரவழைக்கப்பட்ட மேசை,
தரை மின்விசிறிகள், கூரை விசிறிகள்
பெருமளவில் தருவிக்கப்பட்டுள்ளன.

பாவனைப் பொருட்கள்: கோல்மன் பெற்றோமாக்ஸ்,
கால்நடைகளுக்கு: உணவுத்தீன் வகைகள், சகல மருந்துவகைகள்
ப. நோ. கூ. சங்கங்களுக்கு சலுகை வசதியுண்டு

வர்த்தக விசாரணைகள்:

மார்க்பெட் - MARKFED

112, பிரதான வீதி, (போன் 504) யாழ்ப்பாணம்,
தலைமையகம்: கூட்டுறவுத் தொகுதி, 127, கிறீன்பாஸ் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி ப. நோ. கூ. ச.

ஊழியர்களுக்கு 70 ரூபா சம்பளஉயர்வுவழங்கப்பட்டது

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் சீர சாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ரூபா 70 சம்பள உயர்வை வழங்குவதில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு முந்தி விட்டது.

இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. கணபதிப்பிள்ளையின் உத்தரவைத் தொடர்ந்து நவம்பர் மாதச் சம்பளத்துடன் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் சகலருக்கும் 70 ரூபா சம்பள உயர்வு வழங்கப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சகல ஊழியர்களுக்கும் அரசாங்க ஊழியர்களைப் போன்று 70 ரூபா சம்பள உயர்வை வழங்கிய ஒரே ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

ஆறு திருட்டு சம்பவங்கள்

தொடர்பாக 'மலைக்கள்ளன்' கைது

(புலோலி)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட 'மலைக்கள்ளன்' என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்துரை தம்பிராசா (மலைக்கள்ளன்) என்பவரே வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்ற பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவர்.

இச்சந்தேக நபர்மீது பொலிசார் உடுபுடவைகள், வாழைக்குலை, வெங்காயம், மாடு, நீரிறைக்கும் இயந்திரப்பைப் ஆகியன திருடினரென ஆறு குற்றச்சாட்டுகள் சுமத்தியுள்ளனர்.

சுமார் 4000 ரூபா பெறுமதியான இப்பொருட்களைத் திருடிய ஆறு குற்றச்சாட்டுகளுக்குமாகப் பொலிசார் இச்சந்தேக நபரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது சந்தேக நபரை 1500 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு நீதவான் மேல் விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

நேரடி விநியோகம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட விவசாயிகள் உரத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் விவசாயிகளின் இருப்பிடங்களுக்கு நேரடியாகச் சென்று உரவகைகளை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் வருகிறது. (க)

சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு:

"சம்பவதினம் சார்ஜன்ட் அன்ரனைக் காணவில்லை"

ஹோட்டல் முதலாளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சம்பவ தினத்தன்று படத்திற்குப் போனேன், படத்திற்குப் போகுமுன்னரும் திரும்பிவந்தபின்னரும் சார்ஜன்ட் அன்ரனைக் காணவில்லை.

சார்ஜன்ட் அன்ரன்கொலை வழக்கில் சாட்சியமளித்த பபி ஹோட்டல் முதலாளி க. புவனேந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணத்தில் 80 ஆகஸ்ட் 2-ம் தேதி பொலிஸ் சார்ஜன்ட் அன்ரனைக் கொலைசெய்ததாகவும், வைத்தியர் சோமசுந்தரத்தைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும், இராணுவ சிப்பாய்களான ஹெட்டியாராய்ச்சி, உப்புல் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் ஏ. எஸ். பி. நிசாம் ஆஜரானார்.

புவனேந்திரன் குறுக்கு விசாரணையின்போது மேலும் கூறியதாவது:

சார்ஜன்ட் அன்ரன் எனது ஹோட்டலுக்கு வந்தாரா என்பதும் எனக்குத் தெரியாது

சட்: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அடையாள அட்டையைப் போட்டுவிட்டு உம்மை கண்டெடுக்கச் செய்திருக்கிறார்?-அப்படியில்லை.

சட்: படத்திற்குப் போகுமுன்பு சார்ஜன்ட் அன்ரனைக் காணவில்லை?-இல்லை.

படத்தால் திரும்பி வந்த போதும் சார்ஜன்ட் அன்ரனைக் காணவில்லை?-இல்லை,

சட்: உமது பணியாளர்கள் சார்ஜன்ட்அன்ரன் வந்ததாகச் சொன்னார்களா?-இல்லை.

சட்: சார்ஜன்ட்அன்ரன்உமது ஹோட்டலுக்கு வரவில்லை?-எனக்குத் தெரியாது

சட்: சம்பவதினம் பரிசித்விலாலிலிருந்து பெட்டிக் கடைக்கு ஓடிவந்தீர்? ஆம்.

சட்: படத்திற்குப் போகுமுன்பு சார்ஜன்ட் அன்ரனைக் காணவில்லை?-இல்லை.

சட்: பின்னர். அங்கிருந்து தாமோதரவிலாவிற்கு டெலிபோன் செய்யப்போனீர்?-ஆம்.

சட்: சந்தேக நபர்களை எங்கு கண்டீர்?-

நான் தாமோதரவிலாஸிலிருந்து திரும்பி வரும்போது ஸ்ரீலங்கா புத்தகக்கடையடியில் கண்டேன்,

வைத்தியர் சாராயம் குடிக்க வருவதில்லை

சட்: வைத்தியர் சோமசுந்தரத்தைத் தெரியுமா?-

ஆம். 7 வருடங்களாகத்தெரியும். அவர் என்ஹோட்டலுக்குச் சாராயம் குடிக்கவோ கொத்துரொட்டி சாப்பிடவோ வருவதில்லை.

வைத்தியருடன் கதைத்துக் கொண்டிருந்தபோதுதான் உதவிகோரிச் சத்தம்கேட்டது? ஆம். நானும் வைத்தியருப் உதவி செய்வோமா? விடுவோமா? என்று கதைக்கவில்லை. வழக்கமாக வைத்தியர் தமது காரைக் கடைக்குச் சற்றுத் தள்ளித்தான் நிறுத்துவார். அன்றிரவு வைத்தியரின் கார் நிறுத்தப்பட்டதைக் கவனிக்கவில்லை.

சட்: கூக்குரல் சத்தம்கேட்டபோது வைத்தியர் ஓடினாரா?-கதைத்துக்கொண்டிருந்தார்.

சட்: எவ்வளவு வருடமாகச் சாராயம்விற்கிறீர்? 3வருடமாக.

சட்: இப்பவும் சாராயம் விற்கிறீரா? ஆம்.

சட்: கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டி உமக்கு எதிராக வழக்கு நடந்ததா? ஆம்.

சட்: உமது ஹோட்டலில் சாராயம் மட்டுமல்ல கஞ்சாவும் விற்றீரா?-ஆம்.

சட்: இச்சம்பவம் நடந்த தினமான ஆகஸ்ட் 2ம் தேதிக்குப்பின் சாராயம் விற்றதாக உமக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை?-இல்லை.

சட்: எதிரிதரப்பில் கூறவது யாதெனில் நீர் யாப்பாண மாவட்டத்தில் பிரசித்பெற்ற சாராய வியாபாரி என்றஅடிப்படையில் பொலிசாரின்உதவியுடன்மாத்திமல்ல பொலிசாருடன் சேர்ந்தும் நடந்துகொண்டால் நன்மை கிடைக்குமென்பதால் பொய்ச் சாட்சியம் அளிக்க முன்வந்துள்ளீர்?- நான் அதை மறுக்கிறேன்.

நீத: சம்பவம் நடந்தபின் பொலிஸார் உமது கடைக்குச் சாராய விற்பனையைப் பிடிக்க திடீர்சோதனை நடத்தினர்களா? ஆம்.

நீத: சாராயத்துடன் பிடித்தார்களா? ஆம்.

நீத: நடவடிக்கை ஏதாவது எடுத்தார்களா?-ஆம்,

நீத: அடையாள அட்டையில் எதனைப் பார்த்தீ ?- முகத்தை.

நீத: ஏன் பார்த்தீர்?- வைத்தியர் சண்டைபிடித்தபடியாலும், முதல் வந்து துவக்கை காட்டி பயமுறுத்தியதாலும் பார்த்தேன்.

நீத: என்ன தோன்றியது?-முதல் வந்தவரென்று தோன்றியது.

ஏ. எஸ். பி. நிசாம் சாட்சியை மறுவிசாரணை செய்தார்.

ஏ. எஸ். பி.: இந்த சம்பவத்தின் பின்பு பொலிசார் உமது கடையில் சோதனை நடத்திவருகிறார்கள்?- ஆம் சமீபத்தில் எனது ஹோட்டலுக்குப் பக்கத்து அறையில் கஞ்சா கண்டுபிடித்தார்கள்.

ஏ. எஸ். பி.: கோத்து ரொட்டி, முட்டை ரொட்டி எங்கு தயாரிக்கப்படுகிறது?-ஹோட்டலுக்குள். இவற்றை வாங்க வாடிக்கையாளர் வருவார்கள். சம்பவம் நடந்து ஒரு கிழமையால் கடையிலிருந்த பணியாள் சென்றுவிட்டார். அவரைத் தேடினேன். ஏறுவூரில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

இம்மாதம் 9 ம் திகதிவரை விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

இன்று

யாழ். பெரியகோவில் வருடாந்தத்திருநாள்

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கள் யாழ். மறைமாவட்டத்து பெரிய கேவிலான புனிதமரியாள் ஆலய வருடாந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது. புனித மரியாள் மாசில்லாமல் உற்பவித்த தினமான இன்று காலை திருநாள் திருப்பலிப் பூசையும் மாலை திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறவுள்ளது. (கி)

மனித உரிமைகள் தினப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் எடுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் தினப் பொதுக் கூட்டம் யாழ். பொதுசன நூலக சாம். சபாபதி மண்டபத்தில் இம்மாதம் 10 ம்திகதி புதன்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கின்றது.

யாழ். நகர முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம், யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன், கோப்பாய் எப். பி. திரு. சி கதிரவேலுப்பிள்ளை, துணைமுதல்வர் திரு. பி. வி. சேவியர், பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி அ. சண்முகதாஸ் மற்றும் பல மாநகரசபை உறுப்பினர்கள் உரைநிகழ்த்துவார்கள். (ச-அ)

மயிர்க்குட்டி
வண்டு
அந்துப் பூச்சி
மூட்டுப் பூச்சி

தமறேன்

அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எல். ஈ. தனிச் நிறப்புள்ள இருமிதாவினி. அது பல விதங்களில் செயற்படும். பூச்சிகளின் உடல் முழுதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உடனென்று தாக்கியும் செயற்படும் பல நிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுக்கணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத்தத்துவெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, நாரத்தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு. வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப் படுத்த உலகெங்கும் தமறேன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறேன் பல முனைக் சக்தி கொண்டதாகையால், பல்வேறு விதமான பூச்சிகளைத் தாக்குதலுக்கு ஆளாகும் மயிரினங்களுக்குப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை
கொழும்பு 10.
தொலைபேசி: 93563

melADS

50 மி. லீட்டர் ரூபா 13-00
100 மி. லீட்டர் ரூபா 23-00
200 மி. லீட்டர் ரூபா 42-50
450 மி. லீட்டர் ரூபா 87-50
4.5 லீட்டர் ரூபா 825-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி வாரம்
வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-சரோஜாதேவி
பாகப் பிரிவினை

SANTHI (JAFFNA) DAILY 5 SHOWS
10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
★ CHARLES BRO SON ★ JIM BROWN
"THE DIRTY DOZEN"
ACTION PACKED COLOR MOVIE

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

வின்ஸர் (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00& 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
FEAR IS THE KEY
Scope-Color Thrill & Action

ராணி (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-30, 7-00 & 9-30
EVELYNE KRAFT LI H SIU HFIEN
in
MIGHTY HIMALAYANMAN
AN EXPLOSIVE MOVE
திரைப்பட ரசிகர்களுக்கு ஓர் வேண்டுகோள் 12-ம் திகதிமுதல் புதிய தமிழ்ப்படம் திரையிடப்படவிருப்பதால், 11-ந் திகதிவரையே மேற்படி படம் காண்பிக்கப்படும்.

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலவை)

ராஜா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
★
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(கலர்மான் கலர்)

ஹரன் (யாழ்ப்பாணம்)
தி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன் - லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
அன்னை இல்லம்

நாகமஸ (வண்ணம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்கமலம்

இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 23ம் திகதி
திங்கட்கிழமை
(8-12-80)

மேடம்: சூழ்நிலையில் நல்ல மாறுதல்கள் தென்படும்.அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும் தொழில்துறையிலும் பாராட்டுதல்கள் வந்து சேரும்

இடபம்: எதிர்பார்த்த முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றமுடியாமல் கவலைப்படுவீர்கள் சிலருக்கு ஆயுதபீடைக்கும் இடமுண்டு.

மிதுனம்: வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்குக் கனிவான தினம் கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும் இன்று சுகபோக தினம்

கடகம்; சிந்தையில் குழப்பநிலை தோன்றும். மனைவியின் உடல்நிலை கவலையைத்தரலாம். செலவினங்கள் அளவிற்கு மிஞ்சியதாக இருக்கும். தெய்வநம்பிக்கை நன்று.

சிங்கம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். ஸ்தலயாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னில்பீர்கள்.

கன்னி: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் இருப்பிடமாற்றத்திற்கான ஆலோசனைகளும் உருவாகும். அரசினரின் ஆதரவும் கிடைக்கலாம்.

துலாம்: சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும் கைத்தொழில்விருத்திக்கும் இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

விருச்சிகம்: குடும்பக்கவலையுடன் குறுக்குவழிக்கலையீடுகள் தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகள் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள். அதிக பேச்சைத்தவிர்க்கவும்.

தனுசு: வெளியிடத் தொர்புகளில் மந்தநிலை காணப்படும். தொழில்சம்பந்தமான கவலைகள் அதிகரிக்கலாம். உடல் நலன் பாதிக்கக்கூடும். சுகாதாரம் வேண்டும்.

மகரம்; இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசிகரிப்பீர்கள். கனிவான நினைவுகள் தலைதூக்கும். கல்வி கற்கும் மாணவர்க்கு இன்று முற்றேற்றமான தினம்.

கும்பம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும். அயலவர்களுடன் அன்பாக நடந்துகொள்ளவும்.

மீனம்: மாதுவழிப் பெமைக்கும் இடமுண்டு மனம்போல் யாவும் நடக்கும் கலையில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

"கட்டுப்பாடுள்ள பரம்பரை உருவாக்கப்பட வேண்டும்"

(உடுப்பிட்டி)

"எதிர்காலத்தில் நாட்டின் பல்வேறு துறைகளிலும் பணிபுரிவதற்கு ஒழுக்கமும், நேர்மையும், கட்டுப்பாடும் மிகுந்த ஒரு பரம்பரை உருவாக்கப்பட வேண்டியது அவசியம்".

இவ்வாறு நைஜீரியாவிலுள்ள மெற்றல் பொக்ஸ் கம்பனியின் பொறியியல் பகுதி ஆலோசகர்திரு. வீ. இராஜேந்திரம் கரவெட்டி புனித லூர்த்துமாதா கன்னியர் மடப்பாலர் பாடசாலையின் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

திரு. வீ. இராஜேந்திரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; "மேல்நாடுகளில் குழந்தைகளின் உள்ளங்களில் உணவுடன் ஒருபகுதியாக தாய்மார்கள் அவர்களுக்கு உயர்ந்த இலட்சியங்களையும் அபிலாஷைகளையும் அவர்களின் உள்ளங்களில் பதித்து விடுகின்றனர். அதனால் தான் அந்நாடுகள் பல்வேறு துறைகளிலும் திறமையும் பாண்டித்தியமும் பெற்ற மனிதனின் சேவை கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

"ஊர் வம்புகள் பேசவோ, சோம்பித்திரியவோ முடியாதவாறு அவர்கள் ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

"வெவ்வேறு துறைகளில் புதுப் புதுக் கண்டு பிடிப்பு முயற்சிகளையும் மேற்கொண்டு உலக லரலாற்றில் இடம்பெறுகின்றார்கள். இதைக் கீழத்தேச மக்களும் நன்கு உணர்ந்து செயலாற்ற முன்வர வேண்டும்". (கு)

சீனிக்குப் பதிலாக யூரியா: முகாமையாளர் இடைநிறுத்தம்

(வவனியா)

சீனிக்குப்பதிலாக அதே நிறைகொண்ட யூரியாவை சீனிச் சாக்கில் தைத்துவைத்து இருப்புக்காட்டியதாகக் கூறப்படும் சங்கக்கடைமுகாமையாளர் ஒருவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வவனியா பெரியகோமரசன்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்தமாதம் 29ம் திகதி திகதி எடுக்கப்பட்ட மாதாந்த இருப்பு, கணக்கெடுப்பின் பொழுது எல்லாவற்றையும் பிரஸ்தாப சங்கக்கடை முகாமையாளர் [illegible] ராம்.

சில தினங்களின் பின் [illegible] யமாகக் கிடைத்த தகவலின் பேரில் வவனியா கூட்டுறவு அபிவிர்த்தி உத்தியோகத்தர் திரு இ கப்பிரமணியம் நடாத்திய திடீர் பரிசோதனையின் போது மேற்படி விஷயம் வெளிவந்தாம்.

50 கிலோ சீனிக்குப் பதிலாக 50 கிலோ யூரியாவை சீனிச் சாக்கில் வைத்து தைத்து கணக்கு காட்டப்பட்டதாம் இதனைத் தொடர்ந்து மொத்தமாக ரூபா 4200 பெறுமதியான பொருட்கள் இருப்பு குறைவாக இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்ட தாம். இதனால் சங்கக்கடையின் முகாமையாளர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இத்தகவலை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

திட்டியில் விளையாட்டு மைதானம்

(அரியாலை)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் வழங்கிய ரூபா நாற்பதினாயிரத்தைக் கொண்டு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற கதிட்டல் வட்டாரத்தில் இருக்கும் இராசசிங்கம் வீதியில் திட்டிப் பகுதியில் புதிய விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இம்மாதம் நடுப்பகுதியில் இந்த மைதானம் திறந்து வைக்கப்படவிருக்கிறது. (ஈ)

குருநகரில் நடைபெற்ற உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

(அரியாலை)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் குருநகர் மைதானத்தில் நடாத்தப்பட்டு வந்த லீக்கின் "பி" பிரிவுகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, சாவகிலும், மைதானமும் நன்றாக அமையாத்தினால் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக லீக்கின் நிர்வாகச் செயலாளர் திரு. ஜி. ஜி. தேவதாசன் தெரிவித்துள்ளார். (ஈ)

கால்வாய் அமைக்கப்படும்

(மன்னார்)

[illegible] தீவுக்கடலோரமாகவுள்ள [illegible] கால்வாய் [illegible] கட்டுக்கரையில் அமைச்சு நிட்டம் வகுத்துள்ளது.

கோடை காலங்களில் இப்பகுதி மீனவர்கள் தங்கள் வலைகளை கரைக்கு இழுத்துவர சிரமப்படுவதால் இவர்களது இச்சிரமங்களை நீக்கும் முகமாகவே இக்கால்வாய் அமைக்கப்படவுள்ளது. (க)

நிர்வாகிகள்

(அரியாலை)

கோப்பாய் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றபோது பின் வருவோர்புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் இரா. புவனேந்திரன், உப தலைவர் தி. வரதராஜன், செயலாளர் க. விக்னேஸ்வரன், உப செயலாளர் எஸ். நாகநாதன், பொருளாளர் ஆர். வி. யோகராசா நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்துபேர் தெரிவு செய்யப்பட்டனர். (ஈ)

முதற்கட்ட வேலை பூர்த்தி

(புலோலி)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படுவரும் இரு மாடிக்கட்டிடத்தின் முதற்கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. ஆடிட்டி எம்.பி. திரு. த. இராசலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இக்கட்டிட அமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

இப்புதிய மாடிக்கட்டிடத்தின் இரண்டாவது கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ஜே. எஸ். நல்லதம்பி தெரிவித்துள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

5வயதுப்பாலகனை விதிவிளையாடியது

(யாழ்ப்பாணம்)

மருந்துப்போத்தலைக்கழுவித் தண்ணீர் குடித்த பாலகன் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் அஸ்பத்திரிக்குஎடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பேதுறுப்பிள்ளை பிறின்சன்ரோசஸ்என்ற 5வயதுப் பாலகனே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது. மரணமானவரின் தாயாரான பேதுறுப்பிள்ளை மேரிரோஸ் சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:-

'எமது வீட்டில் நானும், எனது மாமியாரும் மூன்று குழந்தைகளும் வசித்துவருகிறோம். எனது கணவர் வெளியூரில் வேலைசெய்கிறார். வீட்டில் இருக்கும் எனது மாமியாருக்குக் கண்தெரியாது. சம்பவதினம் காலை 6 மணியளவில் மாமியாருடன் பிள்ளைகள் மூவரையும் விட்டுவிட்டு நான் கடைக்குச் சென்றுவிட்டேன். கடையில் இருந்து திரும்பிவந்து பார்த்தபோது எனது மூத்தமகன் மூர்ச்சையற்றுக்கிடந்தார். அவர் சிறிது காலமாக கையில் அவியநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அதற்கு மருந்தெடுத்து அம்மருந்தைப் புண்ணுக்குப் போட்டு வந்தோம். மருந்து முடிந்துவிட்டது. வெறும் போத்தல் மட்டும் வீட்டில் இருந்தது.

''எனது மூத்த மகன் அம்மருந்துப் போத்தலை எடுத்துத் தண்ணீருக்குள் கழுவி விளையாடிவிட்டு அந்த நீரைக் குடித்துவிட்டுத் துடிதுடித்தார். அப்போது ஏனைய இரு குழந்தைகளும் பக்கத்திலிருந்தபோதும் அவர்களால் எதுவும் செய்யமுடியாது போய்விட்டது. நான் கடையிலிருந்து வந்து பார்த்தபோது எனது மூத்த மகனின் வாயிலிருந்து மருந்து வாடை வீசிக்கொண்டிருந்தது. அவர் மயக்கமுற்ற நிலையில் கிடந்தார்.

மகனைத் தூக்கிக்கொண்டு எனது கணவனின் சகோதரி வீட்டிற்குச் சென்றேன். சகோதரியின் உதவியுடன் மகனை ஆஸ்பத்திரியர் ஒருவரிடம் கொண்டு சென்றோம். வைத்தியர் அவரை உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும்படி வைத்தியர் கூறினர்.

மகனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம். அவர் அங்கு மரணமானர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். சிவராசா சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

மரண விசாரணை அதிகாரி தற்செயலாக ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (கொ)

சைக்கிளில் கொழும்புக்குச் செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஏழு சிரேஷ்ட சாரணர்கள் சிரேஷ்ட ஆற்றற் பிரயாணச்சின்னம் பெறுவதற்காக கல்லூரியிலிருந்து இன்று [illegible] 8 மணிக்கு கொழும்பு [illegible] சைக்கிளில் புறப்படு[illegible] பாலகுட்சணம் [illegible] தலைமைக்காரியாலயத்தை [illegible] 11திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அடைந்திடமிட்டுள்ளார்கள்.

இதில் கலந்துகொள்ளும் சாரணர்களின் பெயர்கள் வருமாறு: கே. கலாரவி, என். சிவலோகராசா, பி. இந்திரஜீ, எஸ். கௌரிபாலன், ஆர். ஸ்கந்தராஜ், பி. நிர்மலன், பி. முருகவேள், இவர்கள் முன்னர் பல பயிற்சிகளில் பங்குபற்றி விருதுகளும், சின்னங்களும் பெற்றவர்கள் ஆவர்.

இந்த ஏழுபேரும் ஜனாதிபதிச் சாரணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவனியா, அனுராதபுரம், சிலாபம் ஆகிய மூன்று நகரங்களிலும் பிரயாணத்தின் போது இரவுகளில் தங்குவர்.

இவர்கள் கொழும்பையடையும் போது கல்லூரிப்பழைய மாணவர்கள் இவர்களை வரவேற்று உபசரிக்கவுள்ளனர்.

நோயாளர் கஷ்டம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாததினால் நோயாளர்கள் அவதிப்படுகின்றனர்.

இவ்வைத்தியசாலைவைத்திய அதிகாரி நோயாளர்களுக்கு மருந்துகள் இல்லாததனால் வெளியில் மருந்துகளை வாங்குமாறு கடிதத்தில் எழுதிக் கொடுக்கின்றார்.

இதனால் இவ்வைத்தியசாலை வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர் வெகுவாகக் குறைந்துள்ளனர். (க)

சுவிஸ்நாட்டுக்கைக்கடிகாரங்கள்
ஓமாக்ஸ்
வண்ணவண்ண டயல்களில்
ஆண்கள் பெண்களுக்கான
மின்னியக்கி – தன்னியக்கி
விசைதிருப்பி – கடிகாரங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் வாங்கலாம்.
வடபகுதி ஓமாக்ஸ் கைக்கடிகார
விற்பனை முகாரி.
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

'சர்வஜன வாக்குரிமை': சுவரொட்டிப் போட்டி

(அரியாலை)

1981-ம் ஆண்டு இலங்கை சர்வஜன வாக்குரிமை பெற்ற 50 ஆண்டுகள் நிறைவுபெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை நினைவு கூருமுகமாகச் சுவரொட்டிப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. பிரதம மந்திரியின் செயலகம், கல்விஅமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து ராஜாங்க அமைச்சின் தலைக்கீழ் சர்வஜன வாக்குரிமை என்ற தலைப்பில் இச்சுவரொட்டிப்போட்டியை நடாத்தத் தீர்மானித்துள்ளது. போட்டிகள் சிங்களமொழி மூலமும் தமிழ் மொழிமூலமுமாக நடைபெறும். ஒவ்வொரு மொழியிலும் போட்டி மூன்று பிரிவுகளைக்கொண்டதாக அமையும்.

பொதுநிலைப் போட்டியில் இலங்கைப் பிரஜைகள் சகலரும் பங்குபற்றலாம். பாடசாலைப் போட்டியில் 14 வயதுக்குட்பட்டவர்களுக்கென ஒரு போட்டியும், 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கென ஒரு போட்டியும் நடைபெறவிருக்கிறது. போட்டிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் தகவல் திணைக்களப் பணிப்பாளருக்குக் கிடைக்க வேண்டும்.

மன்னாரில் பால் சேகரிப்பு நிலையம்

(மன்னார்)

மன்னாரில் பால் சேகரிப்பு விற்பனவு நிலையமொன்று விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரசாந்திய அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் 6 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவிடப் [illegible] அமைக்கப்பட்டு வரும் இந்நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படும். (ந)

வல்வை நகரசபை புதிய உறுப்பினர்

(உடுப்பிட்டி)

காலஞ்சென்ற வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் திரு. சி. தவபுத்திரனின்இடத்திற்குப் புதிதாக ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபைப்பகுதியைச் சேர்ந்த திரு. முருகன் இராசையா என்பவரே வல்வை நகரசபையின் புதிய உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவராவார்.

இவர் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சுட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். உதவி தேர்தல்அலுவலர் திரு. அ. ஜெயரத்னம் வல்வை நகரசபைத்தலைவர் திரு. ச. ஞானமூர்த்திக்கு அறிவித்துள்ளார்.

நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஏழாலைக் கிராமசபை எல்லைக்குள் உள்ள சிவகுரு வீதிக்கு மின்சாரம் வழங்க 22,500 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வீதி வேலை மின்சாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

திருவெம்பாவை

(சித்தன்கேணி)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் இம்மாதம் 13 ம்திகதி திருவெம்பாவை உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

21ம் திகதி ரதோற்சவமும், இரவு நடேசர் ஆருத்ரா அபிஷேகமும், மறுநாள் காலைத்தீர்த்தோற்சவமும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. (சு)

மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலை இலக்கிய [illegible] யத்தில் பெண்கள் பங்கினை [illegible] கருத்தரங்கு [illegible] மகளிர் கருத்தரங்கொன்றினை யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்துள்ளது.

எல்லா நிகழ்ச்சிகளிலும் பெண்களே பங்குகொள்ளும் இக்கருத்தரங்கில், சகலபொது நிறுவனங்களிலிருந்தும், மகளிர் தலைவிகள் உரையாற்றுவர். (அ)

தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கடுமையாக மறுத்துள்ளார்.

வன்முறையினால் அல்லது வன்முறைக்கு ஆதரவளிப்பதலோ தமக்கோ தமது கட்சிக்கோ நம்பிக்கையில்லை என்று தெரிவித்த தி. மு. க. தலைவர்; முதலமைச்சர் எம். ஜி. ஆர். கொலை முயற்சியில் சம்பந்தப்பட்ட சந்தேக நபரான வீரபராக்கிரம பாண்டியன் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றேதெரியவருகிறது என்று நம்பிக்கை வெளியிட்டார்.

நிலைமை இவ்வாறிருக்க தி.மு.க தலைவரின் கூற்றை ஆதரிக்கும் வகையில் மற்றுமொரு தகவலும் வெளியாகியுள்ளது.

மற்றுமொரு தகவல்

'தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கொலைமுயற்சியில் சம்பந்தப்பட்ட வீரபராக்கிரமபாண்டியன் தமிழக முதல்வரின் ஆதரவாளர்' என்று சருத்துவெளியாகியுள்ள திருநெல்வேலி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகச் செயலாளர் திரு. ஆர். கிருஷ்ணன்; 'கட்சித் தட்டமன்றத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. கழக வேட்பாளருக்கு ஆதரவாக வீரபராக்கிரமபாண்டியன் மிகவும் பாடுபட்டார். இதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு' என்றும் விளக்கம் கொடுத்துள்ளார்.

பேரவைப் பொதுக்கூட்டம் மதுரையில் நடைபெறும்

(மதுரை)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 2-வது பேரவைப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 5-ம் திகதி மதுரையிலுள்ள வைகை வடகரையில் நடைபெறவிருக்கின்றது.

திரு. இரா. வீரப்பன் தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் குரும்பசிட்டி இராசநாயகத்தினம் தொடக்க வுரையாற்றவுள்ளார் அதைத் தொடர்ந்து 1977-ம் ஆண்டில் சென்னையிலும் 1980-ல் மொறிசியஸ் தீவில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மகாநாட்டுக் குறிப்புகள்பற்றி விபரிக்கப்படும். ஒவ்வொரு நாட்டின் கிளை அமைப்பாளர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து உதப, இ. விதிகளின் திருத்த தீர்மானங்கள், மற்றும் தலைவர், தலைமைப் பொறுப்பாளர், காப்பாளர்கள், கிளை அமைப்பாளர், தொடர்புக் குழுக்கள் தெரிவுசெய்தல், நியமித்தல் என்பனவும் இடம்பெறும்.

அதிபர்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நபரைக் கைதுசெய்ததுடன் அவருடன் சேர்ந்துநின்ற இருவரையும் கைதுசெய்தனர்.

இவர்கள்மீது வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உரக்களஞ்சியம்

(மன்னார்)

மன்னார் - சிறு நாவற்குளம் என்னுமிடத்தில் உரக்களஞ்சியம் ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நீர்போதாமல்...

5-ம் பக்கத்தொடர்ச்சி)

லாது பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் பெருமுயற்சியினால் இம்முறை தரிசு நிலங்கள்யாவும் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

மக்கினொன் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ❊ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
❊ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ❊ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்,
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

மரண அறிவித்தல்
திருமதி குணபாக்கியம் தம்பு
யாழ். முனீஸ்வரகோயிலடி உரிமையாளர் K. V. தம்பு அவர்களின் மனைவி திருமதி த. குணபாக்கியம் காலமானார். 35, மணிக்கூட்டு வீதியிலுள்ள இல்லத்திலிருந்து பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 8-12-1980 திங்கட்கிழமை (இன்று) காலை 10மணிக்கு வில்லூண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் தண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.
(561)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 8 [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under No [illegible] 8948/78 Vol. Eelanaadu [illegible] Telegrams Eelanaadu, Phone, 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org